# கைசன் தொழில் முயலுநர்கள் தேசிய நிகழ்ச்சி–2015



கைசன்

தொழில்முயலுநர்கள்

Roots of success

# தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

**அரச நிர்வாக உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக நிர்வாக அமைச்சு**

2015 ஆம் ஆண்டுக்கான கைசன் தொழில் முயற்சியாளர் தேசிய நிகழ்ச்சியின் பேரெண்ணமானது சிறு மற்றும் நடுத்தர தொழில் முயலுநர்களை வலுப்படுத்துவதாகும். இது தொடர்பான இலக்குக் குழுக்களாக சிறு மற்றும் மத்தியப் பரிமாணத்தைக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவைகள் துறையிலான தொழிலாளர்களை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி தொடர்பான முன்னோடிகளாக காணப்படுவது அந் நாட்டின் தனியார் வியாபாரத் துறையாகும். இவ்வாறே, நாடொன்றின் பொருளாதாரத்திற்கு அதிகமான பங்களிப்பை வழங்குவதும் இச் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களாகும். பெருமளவிலான வியாபாரங்கள் புதிதுபுனைதல் மற்றும் உற்பத்தித்திறன் விதிமுறைகள் ஊடாக தமது வர்த்தக அலுவல்களை முறையாகவும் விஸ்தீரணமாகவும் சிறந்ததாகவும் முன்கொண்டுப் போவதோடு சிறு மற்றும் நடுத்தர தொழில் முயலுநர்கள் ஆகக் குறைந்த அளவில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தப்பட்டு பெரும் முயற்சியுடன், முறையின்றி தமது வியாபாரப் பணிகளை முன்கொண்டுப் போகும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது சேவையாளர்கள் குழு உற்பத்தித்திறன் விதிமுறைகள், கோட்பாடுகள் தொடர்பான அறிவின்மை காரணமாக இத் துறையை கட்டியெழுப்பல் பெரும் சவாலாக இருப்பினும் இது ஒரு கட்டாயமான நிலையை ஏற்படுத்திவுள்ளது.

இவ்வாறாக பார்க்கின்ற போது மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்ற விதத்தில் சிறு மற்றும் நடுத்தர வியாபாரத் துரை சுமார் 80% ஐ கொண்டமைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியின் 50% பங்களிப்பை வழங்குவதும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரத் துறையே. வேலை ஈடுபாட்டின் 35% ஐ சிறு மற்றும் நடுத்தர வியாபாரத் துறையால் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இவ்வாறாக பார்க்கின்ற போது சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களை முன்னேற்றப்படுத்துவது கட்டாயமான தேவை.

இவ்வாறு, மொத்த தேசிய உற்பத்திக்கு நேரடியான பங்களிப்பை வழங்கும் ஒரு பிரதான துறையான இச் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களின் உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டியதோடு சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களை கட்டியெழுப்புவதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவு, கோட்பாடுசார் அறிவு மற்றும் திறன் மேம்பாடு தொடர்பான தேசிய உற்பத்தித்திறன் மேம்பாடு செயலகத்திற்கு பிரேரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டம் ஊடாக மாபெரும் பக்கபலத்தை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயலுநர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இக் கருத்திட்டம் மூலம் இயலுமாகக் கூடும்.

**இந் நிகழ்ச்சியை நடைமுறைப் படுத்துவதன் நோக்கங்கள்**

- தேசிய பொருளாதாரத்திற்கு சக்திவாய்ந்த துணையாகக்கூடிய வர்த்தக சமூகத்தினரை உருவாக்கல்.
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்களின் வருமானத்தை உயர்த்தல் மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்காக நேரடியான பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல்.
- சிறு மற்றும் நடுத்தர தொழில் முயலுநர்களால் மிக உயர்ந்த தரத்தைக் கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்திச் செய்தல்.
- உற்பத்தித்திறன் மேம்பாட்டின் மூலம் வியாபாரங்களை விஸ்தரித்தல் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை நிர்மாணித்தல்.

- சிறுமற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் போன்றே முறையல்லா தொழில் முயற்சிகள் வலுப்படுத்தல் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு இவர்களின் பங்கேற்பினை உயர்த்தல்.

- தேசிய பொருளாதாரத்திற்கு நேரடி பங்களிப்பை வழங்கும் முக்கிய துறைகளிடையில் அகலமான போட்டித் தன்மையினை ஏற்படுத்தல் மற்றும் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்பு விதிமுறையினை வலுப்படுத்துதல்.

- தற்போது இக் கருத்திட்டம் பம்பஹா மாவட்டத்தில் மிக வெற்றிக்கரமான முறையில் செயற்படுகிறது. இதன் பெறுபேறுகளை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயலுநர்கள் கைப்பற்றிக்கொண்டு இருப்பதற்கான சாட்சிகள் இருப்பதோடு இச் சிறந்த அனுபவங்கள் பகிர்ந்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.

**கருத்திட்டம் நடைமுறைப் படுத்துகின்ற விதிமுறை**

**1 கருத்திட்டம் தொடர்பான முன் பிரசுரங்களை செயற்படுத்துதல். (Promotion)**

- புதுனப்பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொது மக்களை அறிவூட்டல்.
- மாவட்ட மட்டத்தில் கருத்திட்டம் தொடர்பாக தொழில்முயலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுதல்.
- நேர்முக பரீட்சைகள் மூலம் தொழில்முயலுநர்களை தேர்ந்தெடுத்தல்.

**2 தேர்ந்தெடுக்கப்படும் தொழில்முயலுநர்களுக்கு கருத்திட்டம் தொடர்பான அடிப்படை அறிமுக நிகழ்ச்சியினை நடாத்தல். (Introduction &launch )**

- தேர்ந்தெடுக்கப்பட்ட வியாபாரங்களின் தலைவர்கள் தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்துதல்.
- தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து நிறுவனங்களை பார்வையிடல்.
- தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து நிறுவனங்களில் பெயர்ப் பலகை காட்சித்தல், கைசன் ஆலோசனை பெட்டிகள் தயாரித்தல். KIC (Kaizen Implementation Circle)அறிவிப்புப் பலகை ஏற்பாடு செய்வதற்கான அறிவுரைகள் வழங்கல்.

**3 கருத்திட்டம் நடைமுறைப் படுத்துதல் (Implementation)**

- நிறுவன தலைவர்கள் தொடர்பாக பயிற்சிப்பட்டறைகள் நடாத்துதல்.
    - அடிப்படையான உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் அறிமுகப்படுத்துதல்.

- ➢ கைசன் நடைமுறைப்படுத்தும் வட்டங்கள் (KIC) தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் நடாத்துதல்.
- ➢ சிறந்த அனுபவங்களை பகிர்ந்துக்கொள்வதற்கான கள பயணங்கள் ஏற்பாடு செய்தல்.
- ➢ நிறுவன தலைவர்கள் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் பயிற்சிகள் தொடர்பான சந்தர்ப்பங்கள் ஏற்படுதிக் கொடுத்தல்.

- அடிப்படையான உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களின் பதவியணிகள் தொடர்பாக பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்தல்.

- இந் நிறுவனங்கள் மாதத்திற்கு ஒரு முறை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு இணைவான தொடர்புப்பட்ட மாவட்டத்தின் உற்பத்திதிறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்கு உட்படுத்தல். (மேற்பார்வை செயற்பாட்டின் கீழ்)

- கைசன் முகாமையாளர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் தொடர்பாக மாதாந்தம் பயிற்சிப்பட்டறைகள் ஏற்பாடு செய்து இவர்களுக்குரிய செயற்பாடுகள் பெற்றுக்கொடுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளல்.

**04 கருத்திட்டத்தை மேற்பார்வையிடல் மற்றும் வழிநடாத்தல். (Monitoring)**

- இரு மாதங்களுக்கு ஒரு முறை நிறுவன தலைவர்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்துதல் (நிறுவன தலைவர்கள் கட்டாயமாகும்)
- வாடிக்கையாளர் (உள்ளக மற்றும் வெளியக) திருப்த்தியை அளவிட்டுப் பார்க்கக்கூடிய விதிமுறையை ஏற்பாடு செய்தல் மற்றும் அதனை நடைமுறைப் படுத்துதல். (தொடர்பான விதிமுறைகள் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்படும்.)
- தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் உத்தியோகத்தர்களால மற்றும் வெளிவாரி வளமாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து நிறுவனங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல். (பரிசோதனை பட்டியலை அடிப்படையாகக் கொண்டு நிபுண வளமாளர்களால்)
- பதவியணியுடன் ஒரு KIC செயலமர்வை நடாத்துதல்.
- அனைத்து நிறுவனங்களின் பதவியணியினரை பங்கேற்க வைத்து தமது நிறுவனங்களில் ஏற்படுத்திக் கொண்டுள்ள வளர்ச்சியை ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளும் விதிமுறையொன்றை ஏற்பாடு செய்தல்.
- கருத்திட்டங்களை மேற்பார்வையிடும் உற்பத்திதிறன் மேம்பாடு உத்தியோகத்தர்கள் தொடர்புப்பட்ட நிறுவனங்களில் வளர்ச்சியை விமர்சித்தல்.
- நிறுவனங்கள் தேசிய உற்பத்தித்திறன் போட்டித் தொடருக்காக முன்வைக்கப்படுவதற்கு முன் தயார்படுத்தல் மற்றும் பங்கேற்கவித்தல்.

- நிறுவனங்கள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச தரங்கள் பெறுவதற்கு ஊக்குவித்தல். (உ.ம்.SLS, ISO, GMP, OSHAS)

**05 கருத்திட்டங்கள் மதிப்பிடல்(Progress)**

- கைசன் கருத்திடம் மூலம் நிறுவனங்கள் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் உள்ளடங்கும் விதமாக அறிக்கை நிகழ்ச்சிகள் நிர்மாணித்தல். (DVD)
- சிறந்த அனுபவங்கள் பரிமாற்றல் தொடர்பாக நூலொன்று நிர்மாணித்தல். (Best Practice sharing)
- நிறுவனங்களை மதிப்பிடுவதற்காக கைசன் தொழில்முயலுநர் விருது வழங்கல் விழாவொன்றை நடாத்துதல் (தேசிய மட்டத்தில்)
- கைசன் தொழில்முயலுநர் சங்கமொன்றை ஏற்பாடு செய்தல்.

**இக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தொழில்முயலுநர்கள் அடையக்கூடிய நன்மைகள்**

- பதவியணியினரின் மனப்பாங்கு வளர்ச்சி
- இக் கருத்திட்டம் தொடர்பாகதொழில்முயலுநர்களிடையில்நம்பிக்கை ஏற்படுத்துதல்.
- உற்பத்திக் கொள்ளளவின் வளர்ச்சி.
- உற்பத்தி செலவீனத்தின் குறைவு
- மறைமுறையான இலாகரமான சந்தர்பங்களை இனங்காணல்.
- புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகுதல்.
- உள்ளக ஒத்துழைப்பு அதிகரித்தல்
- மனங்கவரக்கூடிய வெளிப்புற சூழல் உருவாகுதல்.
- புதிய உற்பத்திகள் தொடர்பான அபிவிருத்திச் சந்தர்பங்களை அறிமுகப்படுத்துதல்.
- புதிய முதலீடு சந்தர்பங்களை உருவாக்குதல்.
- முறையான உள்ளக முகாமைத்துவ செயற்பாடு விதிமுறையினை இனங்காணல்.
- சர்வதேச பயிற்சி வாய்ப்புக்கள் ஏற்படுதல்.
- பதவியணி திருப்த்தி மற்றும் வாடிக்கையாளர் திருப்த்தி என்பவற்றின் அதிகரிப்பு.

**<u>கைசன் தொழில்முயலுநர்கள் கருத்திட்டத்தின் முக்கியத்துவம்</u>**

1) **நிறுவன உரிமையாளர்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்படுகின்ற பயிற்சிப்பட்டறை**
இதன் போது நிறுவன உரிமையாளர்களின் மனப்பாங்குகளை வலுப்படுத்துவதற்கான முகாமைத்துவ திறன்கள் (தீர்மானித்தல், தலைமைத்துவம், தொடர்பாடல் பகுப்பாய்வு) இலக்காகக் கொண்டுள்ளது. .

2) **<u>கைசன் தலைமைத்துவப் பயிற்சி</u>**
உற்பத்தித்திறன் நிகழ்ச்சிகள் நிறுவனத்தினுள் செயற்படுத்தல் தொடர்பாகப் பொருந்தும் இரண்டாம்தர உத்தியோகத்தரொருவரை இனங்காணப்பட்டு பயிற்சி வழங்கப்படும். இது நீண்டகால பயிற்சியாக இருப்பதோடு உற்பத்தித்திறன் தொடர்பான பயிற்சி, பதவியணியினரை வழி நடாத்தல் பற்றிய பயிற்சி, உற்பத்தித்திறன் மதிப்பீடுப் பணிகள் தொடர்பான பயிற்சி போன்றவற்றை பெற்று கொடுக்கப்படும்.

3) **கைசன் செயற்படுத்தும் குழுக்களை (Kizen Implement Circle)நடைமுறைப் படுத்துதல்.**
நிறுவனத்தின் பதவியணிக்கேற்ப குழுக்களை ஏற்பாடு செய்து செயற்பாடுகளின் மேல் முன்னேற்றம். வீண்விரையத்தை கட்டுபடுத்துதல் போன்றவை தொடர்பாக செயற்படுவதாக அமையும். இக் குழுக்கள் செயற்படும் விதிமுறைகள் தொடர்பான முரையானப் பயிற்சியை அனைவருக்கும் பெற்றுக்கொடுத்தல்.

4) **கைசன் கருத்திட்ட நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்துதல்.**
பதவியணியின் தனிப்பட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் மதிப்பிடல் தொடர்பான தகுந்த படிநிலைகள் அறிமுகப்படுத்துதல்.
கைசன் Box எனும் ஆலோசனைப் பெட்டி இக் கட்டத்தின் போது அறிமுகப்படுத்தப்படும். .

5) **ஒட்டுமொத்த பதவியணியினரை இலக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்வுகள்**
5Sஎண்ணக்கரு, மனப்பாங்கு அபிவிருத்தி, குணநிறைவு, பாதுகாப்பு, பசுமை உற்பத்தித்திறன் போன்ற விதிமுறைகள் தொடர்பான பயிற்சியை சகலருக்கும் பெற்றுகொடுக்கப்படும்.

6) **கைசன் அறிவிப்புப் பலகைகள் பொருத்துதல்.**
கைசன் தொழில்முயலுநர் கருத்திட்டங்களால் ஏற்படுத்தப்படும் மேல் முன்னேற்றங்கள் தொடர்பாக நிறுவன பதவியணியினரை அறிவூட்டப்படுதல்.

7) **கைசன் தொழில்முயற்சிசார் நிறுவனங்களிடையில் இணை தொடர்வுகளை வலுப்படுத்துதல்.**
இதன் போது கைசன் தொழில்முயலுநர் கருத்திட்டத்துடன் தொடர்புக்கொண்ட நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தொடர்ந்து சந்திக்கப்படும். இவ்வாறாக ஏற்படக்கூடிய தொடர்வுகள் காரணமாக விற்பனைக்கான சந்தர்பங்கள் அதிகமாகும். (ஒரு நிறுவனத்தின் உற்பத்திகள் பிறதொரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களாகும்.)

8) **கைசன் தொழில் முயலுநர்களிடையில்ஏற்படக்கூடிய உறவுகளை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.**
இதன் போது நிறுவனங்களிடையில் கிரிக்கட் போட்டிகள், திறன் வெளிப்பாடுப் போட்டிகள், கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தப்படும்.

9) **கைசன் தொழில்முயலுநர்களின் வருடாந்த மாநாடு வருடாவருடம் ஏற்பாடு செய்தல்.**

கருத்திட்டத்தின் சிறந்த அனுபவங்களை பகிர்ந்துக்கொள்வதற்காக எதிர் வரும் திட்டங்கள் ஏற்பாடு செய்துக்கொள்வதற்காக வருடாந்தமாக கைசன் தொழில்முயலுநர்களின் சம்மேளனமொன்றை நடாத்தப்படவுள்ளது.

**10) கைசன் விருது வழங்கல் விழா**

நிறுவன ரீதியிலும் பிரத்தியேக ரீதியிலும் மதிப்பீடுக்கு பாத்திரமாக்கப்படும்.

**11) வேளிநாட்டு பயிற்சிகள் தொடர்பான சந்தர்பங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல்.**

ஆசிய உற்பத்தித்திறன் அமைப்புடனான தொடர்வுகளின் கீழ் வெளிநாட்டு பயிற்சி சந்தர்பங்களில் பங்கேற்க வைக்கும் வாய்ப்புக்கள் ஏற்படுதல்.

**12) பரிசோதனைச் செய்தல்.**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் பரிசோதனை மேற்கொள்ளல்.

**13) கைசன் வர்த்தகக் குழாமொன்று உருவாகுதல்.**

NPS/TCU/4/18

2015.05.27

.............................................

.............................................

.............................................

.............................................

<u>நேர்முகப் பரீட்சை–"கைசன் தொழில்முயலுநர்கள் 2015"</u>

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் அகில இலங்கை ரீதியில் நடைமுறைப் படுத்திட திட்டமிடப்பட்டுள்ள "கைசன் தொழில்முயலுநர்கள் 2015" கருத்திட்டத்தின் நேர்முகப் பரீட்சை தொடர்பாக தங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக பெரு மகிழ்ச்சியுடன் அறியதருகின்றேன்.

தொடர்புப்பட்ட நேர்முகப் பரீட்சை 2015 ஜூன் மாதம் …… ஆம் திகதியன்று மு.ப. ……மணிக்கு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் கேற்போர்கூடத்தில் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பாக நிறுவனத்தின் தலைவர் உரிமையாளர் கட்டாயமாகவே சமூகமளித்தல் வேண்டும்.

அன்றைய திகதியில் கீழே குறிப்பிடும் ஆவணங்கள் மற்றும் தகவல்களை கொண்டுவருமாறு தயவுடன் அறியதருகின்றேன்.

i. நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் (இருப்பின்)

ii. நிறுவனம் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் / சேவைகள் உறுதிப்படுத்துவதற்கான மாதிரிகள் / விபரங்கள் (இயலுமாயின்)

iii. நிறுவனம் தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான புகைப்படங்கள் மற்றும் நிறுவனம் தொடர்பான தகவல்கள் உட்படும் ஆவணங்கள்.

டப். எம். டீ. சுரங்க குணரத்ன,
பணிப்பாளர்
தேசிய உற்பத்தித்திறன் செயலகம்.